Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை (16-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 278

## புளியங்குளத்தில் நேற்று கடும் சண்டை மூண்டது!

வவுனியா, செப். 16

புளியங்குளம் பகுதியில் நேற்று அரசுத் துருப்புகளுக்கும் புலிகளுக்கும் இடையில் உக்கிரச் சண்டை மூண்டது.

நேற்று அதிகாலை முதல் இருளும் வரை அப்பகுதியில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

புளியங்குளத்தில் முன்னேறி புலிகளின் நிலைகளைச் சுற்றிவளைக்கும் முனைப்பில் அரசுத் துருப்புக்கள் ஈடுபட்டிருப்பதாகவும் —

புலிகளின் எதிர்ப்பு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை எனவும் —

இதனால் அனேகமாக இன்று புளியங்குளத்தை முற்றாக அரசுத் துருப்புகள் கைப்பற்றி விடும் என எதிர்பார்க்கலாம் எனவும்—

வவுனியாவுக்குக் கிடைத்த இராணுவச் செய்திகள் தெரிவித்தன.

புளியங்குளம் சமரில் காயமடைந்த துருப்புக்களை ஏற்றிக் கொண்டு, அம்புலன்ஸ்கள் நேற்று வவுனியாவில் பரவலாக ஓடித் திரிந்ததையும் காணமுடிந்தது.

நேற்றைய சமரினால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து விரிவான தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

## புதூரிலும் கடும் மோதல் 5 புலிகள் களப்பலி!

வவுனியா, செப். 16

புளியங்குளம் பகுதியில் இருந்து புதூர் பகுதியை நோக்கி முன்னேறிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் சண்டை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சண்டையில் இராணுவத் தரப்புக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும்—

தமது தரப்பில் ஐந்து போராளிகள் களப்பலியானதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகுமார், வில்வன் மற்றும் திருமலையைச் சேர்ந்த மாவளவன் ஆகியோரும், பெண் போராளிகளான திருமகள் (பூநகரி), கப்டன் மதி (யாழ்ப்பாணம்) ஆகியோரும் இச் சண்டையில் களப்பலியானதாக அறிவிக்கப்பட்டது.

(ஐ-164)

# யுத்தத்தை நிறுத்தி பேசுமாறு கோரி மட்டக்களப்பில் மாபெரும் ஊர்வலம்!

## நேற்று 50 ஆயிரம் பேர் திரண்டனர்

மட்டக்களப்பு, செப்ரெம்பர் 16

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி நிபந்தனையற்ற பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நேற்று மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

இந்தப் பேரணியில் ஐம்பதாயிரம் மக்கள் பங்கு பற்றியதாக மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் நேற்றுக் காலை ஆரம்பமான ஊர்வலங்கள் நேற்று நண்பகல் கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் பகுதியில் சங்கமித்தன.

பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் ஐம்பதினாயி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி. பி. அலுவலக சம்பவம்: சந்தேகத்தில் இருவர் கைது!

கொழும்பு, செப். 16

ஈ. பி. டி. பி. அமைப்பின் கொழும்பு தலைமையகத்தில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த சகாயராஜா என்பவரை சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர் அக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த அலுவலகப் பொறுப்பாளர் தம்பிராசா வடிவேல் என்பவரின் உதவியாளர் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் இவர் வழங்கிய தகவலை அடுத்து ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட ஆர். ராமேஸ்வரனின் செயலாளரான சிவா என்பவரை நாரஹன்பிட்டி பொலீஸார் கைது செய்தனர்.

இவ்விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராமேஸ்வரன் தலையிட்டதை அடுத்து தேவைப்படும் போது விசாரணைக்கு ஆஜராகவேண்டும் என்ற நிபந்தனையுடன் அவர் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-9-21)

## எம். பிக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு!

கொழும்பு, செப். 16

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் அரசின் திட்டத்தை எதிர்க்கப்போவதாக லங்கா சமசமாஜக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை எதிர்க்கப் போவதில்லை என்று அரசில் அங்கம் வகிக்கும் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் சிறிமா்னி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்துவது தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும் என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(ஐ-150-3)

## ஜனாதிபதி மலேசியா விஜயம்

கோலாலம்பூர், செப். 16

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று மலேசியா போய்ச் சேர்ந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் 40 பேர் அடங்கிய வர்த்தகத் தூதுக்குழு ஒன்றுக்குத் தலைமை வகித்து ஜனாதிபதி அங்கு சென்றுள்ளார்.

1957 ஆம் ஆண்டில் இலங்கைக்கும், மலேசியாவுக்கும் இடையே ராஜதந்திர உறவுகள் ஏற்பட்ட பின்னர் இலங்கை அரசுத் தலைவர் ஒருவர் அங்கு விஜயம் செய்வது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் கூடுதலான மலேசிய முதலீட்டைக் கவரும் நோக்கில் ஜனாதிபதி இந்த விஜயத்தில் ஆர்வம் [illegible] தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலை - யாழ். கப்பல் சேவை: வெள்ளியன்று முடிவு தெரியும்

யாழ்ப்பாணம், செப். 16

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் சேவைக்கு மலேஷியக் கப்பல் ஒன்றைப் பயன்படுத்துவது குறித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும் கூட்டம் ஒன்றில் இறுதி முடிவு எடுக்கப்பட விருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகின்றது.

மேற்படி மலேஷியக் கப்பல் இக்கடற் பாதையில் சேவையில் ஈடுபடுவதற்கு தகுந்ததுதானா என்பது குறித்தும் —

ஏனைய விடயங்கள் குறித்தும் —

வெள்ளியன்று நடைபெறும் மாநாட்டில் விரிவாக ஆராயப்படும். இக்கப்பலை அச்சேவைக்குப் பயன்படுத்த [illegible] மலேஷியாவுக்கு — அக்கப்பல் நிறுவனத்துக்கு தகவல் அனுப்பப்படும் என்றும்—

தகவல் கிடைத்து ஐந்து நாள்களில் பயணத்துக்குத் தயாரான நிலையில் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடையும் என்றும் —

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## ரணிலின் தலைமையில் பெலியத்தவில் சத்தியாக்கிரகம்

கொழும்பு, செப். 16

பெலியத்த பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் எம். கே. குணரத்தின அண்மையில் படுகொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்றுக் காலை பெலியத்தவில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தொண்டர்கள் உட்பட பலர் அதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை—

பெலியத்த நகரை அலங்கரிப்பதில் ஈடுபட்டிருந்த சிலர் மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. அதில் இருவர் காயமடைந்ததாக பொலீஸார் தெரிவித்தனர். அதேசமயம் காலஞ்சென்ற குணரத்தினவின் இல்லத்துக்கு முன்பாகவும் குண்டு வெடிப்புச் சம்ப

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பலை எதிர்பார்த்து

# திருமலையில் தவம் கிடந்தோர் மன்னார் செல்வதில் நாட்டம்

திருகோணமலை, செப். 16

யாழ்ப்பாணம் செல்வதற்காக திருகோணமலையில் நீண்டகாலமாகக் கப்பலை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த மக்கள் பலர் தற்போது அங்கிருந்து மன்னாருக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

மன்னாரில் இருந்து தற்போது யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபட்டுள்ள 'தராகி' கப்பலில் இடம்பிடிப்பதற்காகவே அவர்கள் அங்கு செல்லத் தொடங்கியுள்ளனர். நாளாந்தம் சுமார் 30 முதல்40 பேர்வரை திருமலையில் இருந்து மன்னார் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலை எதிர்பார்த்து திருமலையில் தவம் கிடந்தவர்களில் ஒரு பகுதியினர் ஏற்கனவே அங்கிருந்து கொழும்பு சென்று விமானம் மூலம் யாழ். திரும்பியுள்ளனர்.


## வாழ்த்துகின்றோம்

யாழ். போதனா வைத்தியசாலை ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேக வைபவத்தில்

"சாதக வித்வ சிரோமணி" என்னும் சிறப்புப் பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்ட எமது தேவஸ்தான பிரதம குருக்கள் சாதகர்

சிவஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள்

வசந்தன் ஐயா அவர்களுக்கு

எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரைக் கௌரவித்த தேவஸ்தானத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பரிபாலன சபையினர்,
கொய்யாத்தோட்டம்,
ஞான செல்வ விநாயகர் தேவஸ்தானம்.

(49674)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பழனித்துரை யோகேஸ்வரி (ராணி)

இல. 24/3 குமாரவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பழனித்துரை யோகேஸ்வரி (ராணி அன்ரி) 15-09-97 இல் சிவபதம் எய்தியுள்ளார்.

இவர் வீரசிங்கம் பழனித்துரை (ஓய்வு பெற்ற சிரேஷ்ட சுகாதார பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான ஐயாத்துரைபூரணம்தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ் சென்றவர்களான வீரசிங்கம் ஞானம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், யசோதா, திருமதி றமணி தயாபரன், முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி மகேஸ்வரி ஜீவரத்தினம், திருமதி முத்துலிங்கம் புவனேஸ்வரி, தயாபரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் (அதிபர், யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), திலகரோஜனி கந்தசாமி, திருமதி தயாளினி சிறீகரன், முரளீதரன், சதீஸ்குமார், றூபன், திருமதி பாமினிமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி பவித்தா, செல்வி சுவித்தா, செல்வன் ஈசன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-9-97) செவ்வாய்க்கிழமை பி. ப. 2-00 மணியளவில் (புதிய நேரம்) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வீ. பழனித்துரை
(கணவர்)

நல்லூர். (49675)

### திருமதி சவரிமுத்து மேரிதிரேசா

யாழ். கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகக் கொண்ட சவரிமுத்து மேரிதிரேசா 15-09-97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சவரிமுத்துவின் அன்பு மனைவியும், ச. செல்லம்மா, கனகம்மா, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ச. பிரான்சிஸ், ச. அலெக்ஸ்சாண்டர் (யாழ். மாநகரசபை மின்சார உத்தியோகத்தர்), மேரிலூசியா ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி புஸ்பம், சரஸ்வதி (வேவி) ஆகியோரின் மாமியாரும், பெலிக்ஸ் பிஸ்மன், சதீஸ்சர்ஸ்மன், கபீர்தன், சுயீர்தன், சயூர்தன், சம்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 16-09-97 பிற்பகல் 2.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பிரான்சிஸ்
(மகன்)

46, புது வீதி,
கொய்யாத்தோட்டம்.
(4967?)

# காணாமற் போனோர் விசாரணை

# 42 பேரை சமுகமளிக்க அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பான இராணுவப் பொலீஸ் குழுவினரின் விசாரணை யாழ். ஞானம்ஸ் ஹோட்டேலில் கடந்தவாரம் முதல் நடைபெற்றுவருகிறது.

இந்த விசாரணைகளில் இதுவரை சுமார் 75 பேருக்கு மேல் சாட்சியம் அளித்துள்ளனர்.

கடந்த வாரத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களில் 42 பேர் விசாரணைக்குச் சமுகமளிக்கவில்லை என்று — அம்வர்களை எதிர்வரும் 18 ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் தத்தமது பிரிவு கிராம சேவையாளருடன் விசாரணைக்குச் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்ட 42 பேரினதும் விவரம் வருமாறு:

மருசலீன் டெனிஸ் வலன்ரைன் — உரும்பிராய் மேற்கு, ஜோசப் ஜொபேட் — புத்தூர் மேற்கு, வீரசிங்கம் ஜெயராசா—உரும்பிராய், இம்மானுவல் மரியஜெயசீலன் — கைதடி, தவபாலன் தர்மபாலன் — சாவகச்சேரி, முகமட் கவிராஜ் — நாவற்குழி, தம்பி பாஸ்கரன் — கைதடி. செல்வராஜா அன்ரனி நேசராஜா — மல்லாகம், பாலசுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன்— நவாலி, பாலரட்ணம் ஜெயமோகன் — மானிப்பாய், கணேஸ் றமணன் — சுதுமலை.

சதீஸ்வரன் நடராஜா — கைதடி, ரமேஸ் கணேஸ் — கைதடி, கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன் — கைதடி, இளங்கோ வரதராஜா — சாவகச்சேரி, ஏ. ஏ. அருணகிரிநாதன் — சாவகச்சேரி, சீனியர் தர்மலிங்கம் — சாவகச்சேரி, தவச்செல்வம் சுப்பிரமணியம்— கைதடி, ஜெயராசா ரகுபதி—சாவகச்சேரி, பிரபாகரன் சின்னத்துரை — கோப்பாய், சிவரஞ்சன் சிவபாலன் — கொக்குவில், கந்தையா ஸ்ரீதரன் — கோண்டாவில், சோதிலிங்கம் சுரேஸ்குமார்— திருநெல்வேலி, தனராஜா மயில்வாகனம்— கல்வியங்காடு, தயாபரன் செல்லத்துரை — திருநெல்வேலி, விஜயச்சந்திரன் திருச்செல்வம் — கொக்குவில்.

எஸ். ஆர். கில்பேட் — ஆனைக்கோட்டை, எஸ். செல்வரட்ணம் — ஆனைக்கோட்டை, சௌந்திரநாயகம் எட்வின் — சுழிபுரம், நடராஜா சிவகுமார் — ஆனைக்கோட்டை, காசிப்பிள்ளை தேதாரநாதன் — யாழ்ப்பாணம், கேமச்சந்திரன் அரியரட்ணம் — உடுவில், அம்பிகைபாலன் தம்பிநாதர் — ஏழாலை, செல்வநாயகம் மகேந்திரன் — மல்லாகம், வேலாயுதம் சிறிகாந்தன் — இருபாலை, விஜயன் கந்தன்— கோப்பாய், வசந்தமோகன் செல்வநாயகம்— உரும்பிராய் விஜயகரன் பூபாலசிங்கம் — உரும்பிராய், செல்லையா விஜயகுமார் — கோப்பாய், ரட்ணசிங்கம் வசந்தன் — உரும்பிராய், பாலசிங்கம் பாலகுமார் யாழ்ப்பாணம், அன்ரன் ரவிக்குமார் — கொழும்புத்துறை,

(ஐ-9)


எமது புதிய வெளியீடு!
ராம்கி நடித்த
★ புதல்வன்
அடுத்த வெளியீடு
★ கங்கா கௌரி
வீடியோவிமல்
யாழ்ப்பாணம்.
(49677)

சிவா
வெண் திரையில்
கே. கே. எஸ் றோட்.
தினசரி 10-30—2-00 மணி
அருண்குமார் நடித்த
★ கங்கா கௌரி
(49678)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### காணி கொள்வனவு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மேலதிக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக் குறைந்தது 50 பரப்புக் காணி யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவிலோ, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலோ தேவைப்படுகின்றது. ஒரே துண்டாகவோ, அருகருகே அமைந்த துண்டுகளாகவோ இருப்பது விரும்பத்தக்கது. இந்தக் காணியை/காணிகளை பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாகவோ, விலைக்கோ வழங்க விருப்புடையவர்களை 15.10.97 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(இ/1577)

# கட்டுடை, கிளாலி சம்பவங்கள் குறித்து படையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

கடந்த சனிக்கிழமை கட்டுடையிலும் கிளாலியிலும் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்கள் குறித்து 51 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ இம் மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம், கட்டுடைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் வளவு ஒன்றில் உள்ள குப்பைக் கிடங்கில் இருந்து 112 எக்ஸ்ரி 56 ரக ரவைகளை மீட்டுள்ளனர்.

★ அதே தினம் யாழ்ப்பாணம் கிளாலி கடலேரியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைப் படகு ஒன்று அமுக்கத்துக்கு வெடிக்கக்கூடிய செயற்பாட்டைக்கொண்ட 30 கிலோகிராம் எடை உள்ள கடல் கண்ணி ஒன்றை மீட்டுள்ளது.

(இ)

## கப்பலில் முத்திரை

யாழ்ப்பாணம், செப். 16

வடபகுதி தபாற்கந்தோர்களுக்கான முத்திரைகள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் எடுத்துவரப்படும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி வரவிருக்கும் இக்கப்பலில் சகல பெறுமதிகளிலுமான முத்திரைகள் அடங்கிய 40 பைகளும், 62 தபால்பொதிகளும் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதம தபாலக வட்டாரத்தில் இருந்து தெரியவந்தது.

(இ-15)

## நவாலியில் மீளக்குடியமர்வு நிவாரணம்

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ரூ. 5 ஆயிரம் நிவாரணம் 84 பேருக்கும் நவாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 96 பேருக்கும் வழங்கப்படவுள்ளன.

கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலிலுள்ளவர்கள் தமது அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை என்பனவற்றுடன் அவ்வப் பகுதி கிராம சேவையாளரைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-100)

## கலை அரங்கு

நல்லூர், செப். 16

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் இசை, நடனத்துறை இயங்கும் மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் புதிய கலை அரங்கு ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் புதிய அரங்கின் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

அரங்கு அமைக்கப்பட்டதும் கைலாசபதி கலை அரங்கம் போன்று இங்கும் இசை நாட்டிய விழாக்களை நடத்தக்கூடிய வசதிகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-103)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், செப். 16

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்மன் கோயிலில் மகாகும்பாபிஷேக தின நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று செவ்வாய் காலை நடைபெறும்.

மாலை 3மணிக்கு திருவூஞ்சல், ருது சாந்தி விழா ஆகியனவும் இடம்பெறும்.

(இ-3)

## எழுதுவினைஞர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 16

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரில் மேலும் 58 பேர் நேர்முகப்பரீட்சைக்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு கோரும் கடிதங்கள் நேற்று யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன. பின்னர் அவை உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# பாலத்தில் ஓடிய ரயிலின் 5 பெட்டிகள் ஆற்றில்!

## மத்திய பிரதேசத்தில் 77 பயணிகள் பலி!!

புதுடில்லி, செப். 16

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ரயில் விபத்தில் 77 பயணிகள் கொல்லப்பட்டனர். 200-க்கு மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர்.

இந்த ரயில் குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத் நகரில் இருந்து மேற்கு வங்காளத்தின் கவுரா நகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது.

மத்திய பிரதேசத்தின் சம்மாநதிப் பாலத்தை ரயில் கடந்தபோது 5 பயணிகள் ரயில் பெட்டிகள் பாலத்தில் இருந்து ஆற்றில் விழுந்தன.

இந்த ரயில் பெட்டிகள் வீழ்ந்த ஆறு தண்ணீர் இல்லாமல் வரண்டு இருந்தது.

வீழ்ந்த ரயில் வெட்டிகளில் சுமார் 300 பயணிகள் இருந்தனர்

மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்க்என கூறப்படுகிறது.

ஆற்றின் மேல் பகுதி பாலத்தில், ரயில் தண்டவாளத்தில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்றும் —

இது குறித்து ரயில் சாரதிக்கு முன் தகவல் கிடைக்கவில்லை என்றும் —

பாலத்துக்குள் நுழைந்த பின்புதான் புனரமைப்புப் பணி நடப்பதைக் கண்ட சாரதி ரயிலை நிறுத்த முயன்றார் என்றும் — கூறப்படுகிறது.

விபத்துக் குறித்து முழு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று 42 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் — மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

மத்திய ரயில்வே அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்பான், மாநில முதலமைச்சர் திக் விஜயசிங் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

மூத்த அதிகாரிகள் கொண்ட குழு அங்கு சென்று மீட்புப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

(இ-3)

## ஜேர்மன் விமானம் அங்கோலாவில் வீழ்ந்தது

### 24 பேர் கொல்லப்பட்டனர்

றுவாண்டா, செப். 16

தென் ஆபிரிக்கா நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஜேர்மன் இராணுவ விமானம் ஒன்று அங்கோலா கடற்பரப்பில் வீழ்ந்து நொறுங்கியது. விமானத்தில் இருந்த 24 பேர் கொல்லப்பட்டனர்.

ஜேர்மன் விமானம் விபத்துக்குள்ளான அதே கடற்பகுதியில் அமெரிக்க சி 143 ரக இராணுவ சரக்கு விமானம் ஒன்றும் காணாமற் போயுள்ளது.

இரு விபத்துக்களும் ஒரே நேரத்தில் நடந்திருப்பதால் இரு விமானங்களும் நேருக்கு நேர் மோதியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

அமெரிக்க மேரிலாண்ட் மாகாணத்தில் நேற்று முன்தினம் எவ் 117 ரக பொம்மர் விமானம் பயிற்சியின் போது வீழ்ந்து நொறுங்கியது. விமானி பரசூட்டில் ஏறி உயிர்தப்பினார்.

ஓமான் நாட்டுக் கடற்பகுதியில் பயிற்சிப் பணியை மேற்கொண்ட அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று கடலில் வீழ்ந்து மூழ்கியது.

குர்திஷ் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த துருக்கி இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று மின்கம்பத்தில் உரசி வெடித்து சிதறியது. ஹெலியில் இருந்த 10 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

(இ-3)

## எலிஸபெத் மகாராணி முடி துறக்க வேண்டும்

### பிரிட்டிஷ் மக்கள் விருப்பம்

லண்டன், செப். 16

இளவரசர் வில்லியம் முடி சூடுவதற்கு வசதியாக பிரிட்டிஷ் மகாராணியார் முடி துறக்க வேண்டும்

பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலானோர் இவ்வாறு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மகாராணியார் நவீன சமூகத்துடன் தொடர்பில்லாமல் விளங்குகிறார் என இந்த கருத்துக் கணிப்பீட்டுக்காக பேட்டி காணப்பட்டவர்களில் 72 சதவீதமானோர் கூறியுள்ளனர்.

இளவரசர் சார்ள்ஸுக்குப் பதிலாக 15 வயதுடைய இளவரசர் வில்லியம் முடி சூட வேண்டும் என பேட்டி காணப்பட்டவர்களில் 10 பேருக்கு 6 பேர் என்ற அடிப்படையில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(ஐ-5)

## இந்தியாவுக்கு அமெரிக்கா ஆதரவு

நியூயோர்க் செப் 16

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் கோரும் இந்தியாவுக்கு ஆதரவு வழங்கும் பிரேரணை இந்த வாரம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டு வரப்படும்.

சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கு உரிய இடத்தை பெற்றுத் தருவதற்கு இச்சட்டம் முக்கிய நடவடிக்கையாக இருக்கும் என்று 2 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க நாடாளுமன்றக் குழு செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தது,

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு உரிய இடம்பெற்றுத் தரும் முயற்சியின் முதல் நடவடிக்கையாக இச்சட்டம் இருக்கும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்,

(இ - 3)

## சமாதான முயற்சிக்கு யஸீர் அரபாத் ஆதரவு

ஜெருஸலேம், செப். 16

அமெரிக்க வெளியுறவுச் செயலர் திருமதி மடலின்ஆல்பிரைட் மேற்கொண்டுள்ள மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் வரவேற்றுள்ளார்.

''சமாதான முயற்சிகள் விரைவாகவும், தெளிவாகவும் முன்னெடுக்கப்படாவிட்டால் பலஸ்தீனப்பகுதி பெரும் குழப்பத்தை அல்லது யுத்தத்தைக் கூட சந்திக்கலாம்'' என்று அவர் எச்சரித்தார்.

அதே சமயம் அரபு - இஸ்ரேல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படா விட்டால் மத்திய கிழக்குப்பகுதி பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் என்று ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் எச்சரித்துள்ளார்.

(இ-3)

### உலக அரங்கில்

## கடும் இடிமின்னல் தாக்கி ஆந்திராவில் 30 பேர் பலி!

புதுடில்லி, செப். 16

இந்தியாவின் தென் பகுதி மாநிலமான ஆந்திராவில் பெய்த கடும்மழை காரணமாக 40பேர் வரை உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் 30 பேர் இடிமின்னல் தாக்கி மரணமடைந்ததாகவும், ஏனையோர் வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் கொல்லப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அனந்பூர் மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 500 குடும்பங்கள் பாதுகாப்பான பகுதிக்கு அப்புறப்படுத்தப்பட்டன.

ஆந்திரா மாநிலத்தில் உரியவேளையில் மழை பெய்யாததால் நிலவி வந்த கடும் வரட்சிக்குப் பின்னர் கடந்த சில நாள்களாக அங்கு அடைமழை பொழிந்துள்ளது.

(ஐ)

## காங்கிரஸிலிருந்து வாழப்பாடி நீக்கம்

சென்னை, செப். 16

காங்கிரஸ் கட்சியில் இருந்து வாழப்பாடி இராமமூர்த்தி தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டதற்காக அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே. வி. தங்கபாலு தெரிவித்தார்.

கட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அன்பரசன் உள்ளிட்ட 7 பேருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் கட்சியின் செயற்குழு கூடிய சமயம் வாழப்பாடி ராமமூர்த்தியை நீக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர் எண்ணிக்கை உயர்வு

மானிப்பாயில் செயற்பட்டு வரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின்எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் இங்கு 7 ஆயிரத்து 624 பேருக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காய்ச்சல் நோய் பீடித்தவர்களை இங்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது 69 பேருர்கு மலேரியா நோய் ஏற்பட்டது கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. 5 பேருக்கு மூளை மலேரியா நோய் தொற்றியிருப்பதும் கண்டுபிடிக்சப்பட்டுள்ளது

இவ் வைத்தியசாலையில் சலரோக நோயாளர்களுக்கான கிளினிக் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் நடைபெறுகிறது. குழந்தைப் பிள்ளைகள், சிறுவர்களுக்கான கிளினிக் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் முற்பகல் நடைபெற்று வருகின்றது,

வைத்திய கிளினிக் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படுகிறது,

(ஐ - 135)

## 31 ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை ரூ.5,000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாவட்டத்தில் இதுவரை 31 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கும் விரைவில் வழங்கப்படும்.

வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீள்குடியமர்வு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபாவை ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கும் திட்டத்தின் கீழ் 49 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்க எம்மிடம் விவரம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் 31 ஆயிரம் குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டது. ஏனையோருக்கு விரைவில் வழங்கப்படும் — என்றார் அவர்.

(ஐ-3)

## திருமந்திர விரிவுரை

யாழ்ப்பாணம், செப். 16

நல்லை ஆதீனத்தில் ஒவ்வொரு போயா தினமும் நடைபெற்று வரும் திருமந்திர தொடர் விரிவுரை வகுப்பு இம்முறை நடைபெற [illegible] என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## வவுனியா திட்டமிடல் செயலக பெயர்ப்பலகை திரை நீக்கம்

வவுனியா, செப். 16

வவுனியா மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யும் நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது.

''மாவட்ட திட்டமிடல் செயலகம், வவுனியா'' என்ற வாசகத்தை மும்மொழிகளிலும் கொண்ட பெயர்ப்பலகையை வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் திரைநீக்கம் செய்து வைத்தார்.

''வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கும், வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கும் இந்த அலுவலகம் பணிபுரிய வேண்டும். அபிவிருத்தி தொழிற்பாடுகளை நெறிப்படுத்தல், இணைத்தல், மீளாய்வு செய்தல் என்பன திட்டமிடல் செயலகத்துக்குரிய பாரிய பணிகளாகும்'' என்று அரச அதிபர் தமது உரையில் தெரிவித்தார்,

வவுனியா மாவட்ட திட்டமிடல் செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் வி. எஸ். சுவாமிநாதன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் வவுனியா தெற்குப் பிரதேச செயலர் எம். எம். தர்மபாலா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பரமகுலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்

(இ-3)

## கெயர் உதவி

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு கெயர் ஸ்தாபனம் உதவிப்பொருள்களை வழங்கவிருக்கிறது.

நாளை காலை 9. 30 மணிக்கு சங்கத்தின் யாழ். பிரதான வீதி பணிமனையில் வைத்து யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் இந்த உதவிப் பொருள்களை வழங்கும்.

(இ-3)

## பயிர்கள் நாசம்

தென்மராட்சி, செப். 16

சாவகச்சேரி நுணாவில், கல்வயல், கற்குளி ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் அலையும் கட்டாக்காலி கால்நடைகளால் மரக்கறிப் பயிர்கள் அழிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

ஜொலி மாஸ்மலோஸ், ஜொலி திரீகலர்மாஸ் மலோஸ், நெல்லிரசம் மற்றும் தரமான பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: J. L. A செல்வநாயகம், 37/7, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். (49671)

**தவறிவிட்டது**

மல்லாகம் கோட்டைக் காட்டைச் சேர்ந்த சிவலோக நாதன் ஜெயகிருஷ்ணகுமார் என்பரது விசேட அடையாள அட்டை மயிலணி வீதிக்கும் பலப்பை வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். புண்ணியமூர்த்தி கடை, கோட்டைக்காடு, மல்லாகம். (49664)

கனகசிங்கம் சற்குணராசா என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம், திணைக்கள அடையாள அட்டை என்பன ஒரு தொகைப் பணத்துடன் திருநெல்வேலிக்கும், உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். மாநகர சபை, யாழ்ப்பாணம். (சன்மானம் வழங்கப்படும்). (49672)

# மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருப்பு

வலிகாமம் தெற்கு, செப். 16

எட்டு மாதங்களாக மழை பெய்யாததால் கடும் வரட்சி நிலவுகின்றது.

கால போக நெற்செய்கைக்காக மழையின் வருகையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

வயல்கள் பசளைகள், குப்பைகள் இடப்பட்டு உழுது பண்படுத்தப்பட்டுள்ளன. ஆவணி மாதம் முடிந்த பின்னரும் மழை பெய்யாது தாமதிப்பதனால் காலபோக நெற்செய்கை பாதிப்படையலாம் என விவசாயிகள் கருதுகின்றனர். (ஐ-152)

குடாநாட்டில் கடந்த

## கட்டுரைப் போட்டி

நல்லூர் பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசம் இப்பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களிடையே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக இடம்பெறும் எனச் சமாசத்தின் பொதுச் செயலாளர் செ. சண்முகலிங்கம் தெரிவித்தார். (ஐ-30)

**SPECIAL ENGLISH**

சகல மொழித் திறன்களையும் கொண்ட கற்கை நெறி

**WEEK-DAY CLASS:**

செவ்வாய், வியாழன்: 10.30 — 12.30

**WEEK-END CLASS:**

சனி 2.30 — 4.30

ஞாயிறு 10.30 — 12.30

**ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்**

**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(49670)

# நவராத்திரி விழாவை முன்னிட்டு மாணவரிடையே போட்டி

வலிகாமம் தெற்கு, செப். 16

எதிர்வரும் நவராத்திரியை முன்னிட்டு உடுவில் கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களிடையே சமயப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

சைவசமய தொண்டு செயன்முறை, திருமுறைப் பண்ணிசை, மனனமுற்றோதல் போன்ற போட்டிகள் நடைபெறும்.

ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடையேயும் பூக்களைக் கொண்டு பல்வேறு மாலைகள் கட்டுதல், மகரதோரணம் பின்னுதல், பூ மற்றும் தானியங்களைக் கொண்டு கோலங்கள் அமைத்தல், புராணபடனம், கதாப்பிரசங்கம், திருமுறை பண்ணிசை நீதிச் செய்யுள் மனனப்போட்டி போன்றவற்றை இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்பாக நடத்தி முடிக்குமாறு கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் பாடசாலை அதிபர்களைப் பணித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெறுபவர்கள் கோட்டமட்டப்போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

கோட்ட மட்டத்திலான போட்டிகள் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (இ-152)

## விவசாயிகள் கோரிக்கை

அரியாலை கிழக்கில் பாதுகாப்புப் படையினரின் அரணுக்குச் சமீபமாகவுள்ள வயற் காணிகளில் காலபோக நெல் விதைப்புக்கு அனுமதியளிக்குமாறு இப்பகுதி விவசாயிகள் பாதுகாப்புபடை உயரதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-135)



# ஓவியம் படைத்திடுவீர்!

AHC

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் - 10

★ மேற்படி உலக உளநல நாளையொட்டி ''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவில் ஓவியப் படைப்புகளுக்கான ''சாந்திகம்'' களம் அமைகிறது.

★ இந்த ஆண்டு ஓவியப் படைப்பாக்கக் களம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

★ ஒவ்வொரு பிரிவினரும் அப்பிரிவுக்குரிய வாசகங்களைத் தூண்டுதலுக்கான தொனிப்பொருளாகக் கொண்டு தங்களது துலங்கல்களை ஓவியமாகப் படைக்க வேண்டும்.

★ ஓவியப் படைப்புக்கள் தற்புதுமையானவையாகவும், கலைத்துவம் நிறைந்த படைப்பாக்கங்களாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ ஓவிய வகைகளையும், ஓவிய சாதனங்களையும் விரும்பியபடி தெரிவு செய்யலாம்.

★ படைப்புகள் ஆகக் குறைந்தது 35 x 25 சென்ரிமீற்றர் அளவு கொண்டதாக அமையவேண்டும்.

★ அப்படைப்பு தடித்த அட்டையில் ஆகக் குறைந்தது 4 செ.மீற்றர் கரை நாற்புறமும் வருமாறு அழகாக ஒட்டப்படவேண்டும்.

★ சமர்ப்பிக்கப்படும் ஓவியங்கள் அனைத்தையும் கொண்டதோர் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்படும்.

★ இந்த ஓவியப் படைப்பாக்கக் களத்தில் அதனை நடத்துகின்ற நிறுவனங்களின் பணியாளர்கள் தவிர்ந்த ஆர்வமுள்ள எல்லோரும் பங்குகொள்ள முடியும்.

★ ஒருவர் எத்தனை படைப்புகளையும் அனுப்பலாம்.

★ படைப்புகளில் எந்த இடத்திலும் உங்களது பெயர், விலாசம் என்பவற்றை குறிக்க வேண்டாம்.

★ ஓவியப் படைப்புகளை 1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதிக்கு முன்பதாக பின்வரும் இடங்களில் ஒப்படைக்கவும்.
1. சாந்திகம், இல. 15, கச்சேரி, நல்லூர் வீதி, சுண்டுக்குளி
2. உதயன் பணிமனை, இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3. உளநோய் சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

★ படைப்புகளைச் சமர்ப்பிக்கும்போது தவறாமல் அதற்குரிய படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திக் கொடுத்து உங்களுக்குரிய பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

★ தெரிவுக் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

★ தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களைப் படைத்த கலைஞர்கள் கௌரவிக்கப் படுவார்கள்.

● பிரிவு ஒன்று — ஆண்டு ஐந்து வரையிலான மாணவர்கள்.
வாசகம்: **அம்மாவும் அப்பாவும் நானும்.**
முதலாவது தெரிவு ரூபா **500**
இரண்டாவது தெரிவு ரூபா **300**
மூன்றாவது தெரிவு ரூபா **200**

● பிரிவு இரண்டு — ஆண்டு 6 – ஆண்டு 9 வரையிலான மாணவர்கள்.
வாசகம்: **தந்தையின் கிராமம்**
முதலாவது தெரிவு ரூபா **1,000**
இரண்டாவது தெரிவு ரூபா **750**
மூன்றாவது தெரிவு ரூபா **500**

● பிரிவு மூன்று — ஆண்டு 10 - ஆண்டு 13 வரையிலான மாணவர்கள்.
வாசகம்: **பாழடைந்த கோயிலின் பரம்பொருள்**
முதலாவது தெரிவு ரூபா **2,000**
இரண்டாவது தெரிவு ரூபா **1,500**
மூன்றாவது தெரிவு ரூபா **1,000**

● பிரிவு நான்கு — பயில் முறை, தொழில் முறைக் கலைஞர்கள்
வாசகம்: **சித்தம் அழகியரர்**
முதலாவது தெரிவு ரூபா **5,000**
இரண்டாவது தெரிவு ரூபா **3,000**
மூன்றாவது தெரிவு ரூபா **2,000**

# தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சை 1996 \ 1997

பின்வரும் பயிற்சிநெறிகளுக்குரிய பரீட்சைகள் கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு. ப. 9-30-க்கு ஆரம்பமாகும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| பயிற்சி நெறி | பரீட்சை ஆரம்பமாகும் திகதி |
|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு (இடைக்காலப் பாடத்திட்டம்) 2ஆம் வருடம் (H. N. D. A. II) ட / 113 | 23—09-1997 |
| 2, ஆங்கில தேசிய தகுதித் தேர்வு ட / 119 (N. D. E.) | 23—09—1997 |
| 3. உயர் தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு (H.N.D.C. III) 3ஆம் வருடம் ட / 101 | 23—09-1997 |
| 4. உயர் தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு (H.N.D.C. IV) 4ஆம் வருடம் ட / 104 | 29—09—1997 |
| 5. உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு (H.N.D.A. III) இடைக்காலப்பாடத்திட்டம் 3ஆம் வருடம் ட / 114 | 29—09—1997 |

விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தத்தம் பரீட்சைக்கு முதற்தினம் மாணவ பிரவேச அனுமதிச் சீட்டுடன் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யா/தொழில் நுட்பக்கல்லூரியில் மு. ப. 8-30 மணிக்கு தமது பரீட்சை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

பிறவுண் வீதி,
(கொக்குவில்)
யாழ்ப்பாணம்.

(சி-1575)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 28 — 03 — 1936



விண்ணில்: 28 — 08 — 1996

## திருமதி இரத்தினபூபதி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, (பண்டிதை) கொக்குவில் இந்துக் கல்லூரி)

**திதி: ஆவணி பூரணை 16-09-1997**

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எங்கள் துயர் - என்றும்
எமது அன்பு உம்முடனே இருக்கும்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

பிரிவில் துயருறும்:
குடும்பத்தினர்.

ஞான வைரவர் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(49646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள குடியமரும் மக்களுக்கு நிரந்தர வதிவிடம் வேண்டும்

## அரச சார்பற்ற அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 16
''வலி - வடக்கில் மீளக் குடியமரும் மக்களை நலன் புரி நிலையங்கள் போன்ற தற்காலிக வதிவிடங்களில் குடியமர்த்தாமல் அவர்களை நிரந்தர வதிவிடங்களில் குடியமர்த்த வேண்டும்''

யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அத்தியாவசிய சேவைகள் நாயகமும் வடமாகாண மீள் குடியமர்வு அதிகார சபைத் தலைவருமான சோமபால குணதீரவிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

வலி - வடக்கில் மீள்குடியமரும் மக்கள் நிரந்தர வதிவிடத்தில் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்—

சொந்த இடத்திலும் அவர்கள் அகதிகள் போன்று நலன்புரி நிலையங்களில் இருக்க இடமளிக்கக் கூடாது என்றும் —

அவர்கள் தமது இருப்பிடத்தை சிறிய அளவிலாவது கட்ட வசதியாக அவர்களுக்கு கட்டடப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் —

அத்துடன் அவர்கள் சுகாதார வசதிகள் உட்பட சகல வசதிகளையும் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்— கோரப்பட்டுள்ளது.

(இ-3)

## கட்டுப்பாடுகளைத் தளர்த்த மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 16
கடற்றொழில் செய்ய விதிக்கப்பட்டுள்ள நேரக் கட்டுப்பாடு, மீன்பிடி வலயக் கட்டுப்பாடு ஆகியவற்றை மேலும் தளர்த்தி மீன்பிடிக்குத் தேவையான வலை, இயந்திர வள்ளம் ஆகியவற்றை இலகுவான முறையில் பெறக்கூடிய வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படுமாயின் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும் என மீனவர்கள் தரப்பில் கருத்து நிலவுகிறது.

இயந்திர வள்ளங்கள் தமக்குக் கிடைக்கும் என்றால் ஆழ் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியுமெனில், தென்னிலங்கைக்கு கடலுணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்று யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ - 5)

# காப்புறுதி நடவடிக்கைகள் முழு அளவில் செயற்படும்

யாழ்ப்பாணம், செப். 16
யாழ்ப்பாணத்தில் காப்புறுதி வேலைகள் ஒரு மாத காலத்தில் முழுமையாகச் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் நாயகமும், வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவருமான சோமபால குணதீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வாகனங்களுக்கான காப்புறுதி உட்பட முக்கிய காப்புறுதிப் பணிகள் மேற்கொள்ளப்படாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுவது தொடர்பாக கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவருடன் இது தொடர்பாகப் பேசியுள்ளேன், ஒரு மாத காலத்துக்குள் முழுமையாக காப்புறுதிப் பணிகள் இங்கு நடக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் கூறினார். (இ-3)

## உரம் அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 16
யாழ். மாவட்ட விவசாயிகள் தமது விவசாயத் தொழிலை மீள ஆரம்பிக்க வசதியாக 5 ஆயிரம் மெற்றிக்தொன் உரத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண மீள் குடியமர்வு அதிகாரசபையிடம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் கோரியுள்ளது.

குடாநாட்டில் உள்ள விவசாயிகள் தமது மாத வருமானமாக 5 ஆயிரம் ரூபா வரையில் பெற வசதி செய்யும் முகமாக, அவர்களுக்கான உரத்தை கப்பல் கட்டணம் இன்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கப்பல் கட்டணத்தை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். இல்லையேல் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் நிதி உதவியுடன் கப்பல் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

உரத்தை மலிவு விலையில் வழங்கினால் விவசாயிகள் அதிக வருமானம் பெற முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-3)

# நீண்ட தூரம், பல தடவைகள் சென்று உணவுப் பொருள் வாங்கும் அவலம்

## வடமராட்சி கிழக்கு மக்களுக்கு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உணவுப் பொருள்களுக்கு என்று மக்கள் அலைகிறார்கள். பணம் இருந்தாலும் உணவுப் பொருள்களைப் பெற முடியாத நிலை உள்ளது. இப்பகுதியில் செம்பியன்பற்றில் இருந்து வல்லிபுரக் கோயில் முன்னரங்க நிலை வரையுள்ள மாமுனை, குடாரப்பு, நெல்லியான், நாகர்கோயில், அம்பன், குடத்தனை, மணல்காடு பகுதி மக்களே மேற்படி உணவுப் பொருள்களைப் பெற முடியாது கஷ்டமுறுகின்றனர்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் மருதங்கேணி ப. நோ. கூ. சங்கத்தின் இரு மொத்த விற்பனை நிலையங்கள் இருந்தன. மேலும் 20 கிளை விற்பனை நிலையங்களும், இரண்டு வெதுப்பகங்களும் இருந்தன. ஆனால் தற்போது மருதங்கேணி காப்பரணுக்குள் 3 சில்லறை விற்பனை நிலையங்களும், பருத்தித்துறைப் பகுதியில் 5 சில்லறை விற்பனை நிலையங்களும் உள்ளதாக மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் பெ. சிறில் இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இவரிடம் உணவு நிலைமை பற்றியும், விநியோக நிலைமை பற்றியும் கேட்ட போது அவர் விவரித்ததாவது:-

இன்று வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெரும்பாலான மக்கள் தங்கள் தொழில் வசதிக்காக பாதுகாப்பு அரணுக்கு வெளியிலே வசிக்கின்றனர். இவர்களில் தமது குடும்பங்களை அன்றாடம் உழைத்துப் பராமரிப்பவர்களே கூடுதலாக உள்ளனர். இவர்களின் பிரதானதொழில் கடற்றொழில். இதைவிடசீவல்தொழிலிலும், விவசாயத்திலும் கணிசமானோர் ஈடுபட்டு வருகின்றனர். தமது அன்றாடத் தொழில்களைச் செய்து முடித்துவிட்டு உணவுப் பொருள்களைப் பெற நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக மாமுனையில் இருந்து பருத்தித்துறை வருவது என்றால் 15 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். இவ்வாறு நீண்ட தூரம் சென்றே தமது அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.

இதைவிட சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் இப்பகுதி மக்களால் பாண் வாங்க முடியாமல் உள்ளது. அனேகமான குடும்

**செய்தி மடல்**

பங்களின் காலை உணவாக பாண் இருந்தது. ஆனால், இன்று பாண் என்றால் அதைப் பெற முடியாத ஒன்றாகவே கருதுகின்றனர் — என்றார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மக்கள் நலன் பேணும் சங்கம் என்ற வகையில், இப்பகுதி மக்களின் உணவு விநியோகத்தைச் சீராக்கித் தமது தேவைக்கேற்ப உணவுப் பொருள் கிடைக்கவும், பாதுகாப்பு அரணுக்குள் இருந்து எடுத்துச் செல்லவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்தீர்களா? — என்று கேட்டதற்கு —

தாம் இதற்குப் பல தடவைகள் முயற்சித்ததாகவும், எனினும் தமது முயற்சி பலன் அளிக்கவில்லை எனவும் மிகவும் மனவருத்தத்துடன் கூறினார்.

பாதுகாப்பு அரணுக்கு வெளியில் முன்னர் இருந்ததைப் போன்று சங்கக்கிளைகளை அமைக்க முடியாதா? —எனக் கேட்டேன்.

இவ்விடயம் ச[illegible] படை அதிகாரிகளுடன் கதைத்தோம். பாதுகாப்புப் பிரச்சினைகள் பல இருப்பதால் பாதுகாப்பு அரணுக்கு வெளியே கடைகள் இயங்க அனுமதி தரமாட்டோம் என்று கூறிவிட்டனர் — என்றார்.

வடமராட்சி கிழக்கில் தற்போது 1650 - க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங்களில் 85 சதவீதமான மக்கள் வல்லிபுரக் கோயில் முன்னரங்க நிலையிலிருந்து செம்பியன்பற்று வரையான பகுதிகளிலேயே வசிக்கின்றனர். இவ்வாறு பாதுகாப்பு அரணுக்கு வெளியில் வசிக்கின்ற மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். இவற்றில் ஒன்றுதான் இந்த உணவுப் பிரச்சினையும்.

### மட்டுப்படுத்தப்பட்டது

இப்பகுதி மக்களுக்கு ஒரு மாதத்தில் அண்ணளவாக 30 ஆயிரம் கிலோ அரிசி, 23 ஆயிரம் கிலோ மா, 12 ஆயிரம் கிலோ சீனி, 5 ஆயிரம் கிலோ பருப்பு என்பன தேவை.

மருதங்கேணி ப. நோ. கூ. சங்கத்தின் தலைமைப் பணிமனை புள்ளிவிவரம் ஒன்று மேற்கண்ட தகவலை காட்டுகின்றது. எனினும் கிடைக்கும் உணவுப் பொருள்களோ மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன.

ஆனால் இச்சங்கத்தால் உத்தேச கணிப்பீட்டின்படி பொருள்களை விநியோகம் செய்ய முடிவதில்லை. ஏனெனில் இப்பகுதி மக்கள் பாதுகாப்பு அரணுக்குள் இருந்து உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும்போது, பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பாக இளவயதினர் — 16 முதல் 35 வயது வரை உள்ளவர்கள் — எவரும் பாதுகாப்பு அரண் பகுதிக்குள் நுழைய அனுமதிக்கப் படுவதில்லை.

[illegible] 3 கிலோ அரிசி, 3 கிலோ மா, 3 கிலோ சீனி எனவும் 5 கிலோ அரிசி, 5 கிலோ மா, 5 கிலோ சீனி எனவும் ஒரு நாளுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. ஒரு கிலோ கூடுதலாக எடுத்துச் சென்றாலும் படையினர் கொடுக்கின்ற தண்டனையை ஏற்க வேண்டும்.

இப்பகுதிக்குள் ரயர் - ரியூப் எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் இங்கு ரயர் ரியூப் 350 முதல் 400 ரூபா வரை விற்கப்படுகின்றது. இதைவிட கற்பூரம், 'சொலுசன்', கொம்பகோன் என்பனவும் எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

### தனியார் கடைகள்

இப்பகுதியில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் 29 தனியார் கடை

**செம்பியன்பற்று செய்தியாளர்**

கள் இருந்தன. ஆனால், இன்று ஒரு சில கடைகள் மட்டுமே உள்ளன. இந்தக் கடை உரிமையாளர்களுக்கு சாதாரண ஒரு பொது மகன் எடுத்துச் செல்லும் அளவு பொருள்களையே எடுத்துச் செல்லவே அனுமதி உண்டு. அதனால் இவர்கள் வேறு ஆட்களை சம்பளத்திற்குப் பிடித்து பொருள்களை வாங்கிவர விடுகின்றனர். இதனால் ஒரு கிலோவிற்கு 10 ரூபாவுக்கு மேல் கூலி கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக மாமுனையில் இருந்து பருத்தித்துறை சென்று பொருள்களை எடுத்துவர 150 ரூபா கொடுக்க வேண்டும் இதனால் விற்பனையாளர்கள் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்கின்றனர் நுகர்வோரே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு கிலோ அரிசி கட்டுப்பாட்டு விலையிலும், 13 ரூபா கூடுதலாக விற்கப்படுகின்றது. இவ்வாறே ஏனைய பொருள்களின் விலையும் கூடுதலாக உள்ளது.

### உள்ளே செல்லத் தடை

முக்கியமான ஒரு விடயம் என்னவெனில், சுற்றிவளைப்புகள் மற்றும் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெற்றால் பாதுகாப்பு அரண் பகுதிக்குள் சென்று உணவுப்பொருள்களைப் பெறத் தடை விதிக்கப்படுகின்றது. இதனால், சில குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றன. இத்தகைய நிலை நீடித்தால் இப்பகுதி மக்களின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை அதிகாரிகள் சிந்திப்பது அவசியம்:

அடுத்து, இப்பகுதி மக்கள் தமக்குக் கிடைக்கும் நிவாரணப் பொருள்களையும் படையினரின் கட்டுப்பாட்டுக்கேற்பவே எடுத்துச் செல்ல முடியும். இதனால் மருதங்கேணி பல நோ. கூ சங்கப் பொது முகாமையாளர் ஒருகட்ட நிவாரணத்தை மூன்று தடவைகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். இது வரவேற்கக் கூடிய விடயம்தான். என்றாலும் இம்மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும் மற்றொன்று போக்குவரத்துப் பிரச்சினை. இதனை நன்கு தெரிந்துள்ள பொது முகாமையாளர், பொருள்களை ஒரே தடவையில் கொண்டு செல்ல முயற்சி எடுத்தால் இப்பகுதி மக்களின் துயர் நீக்கிய ஒருவராகத் திகழ்வார்.

உணவுநிலை பற்றி ஒரு மூத்த ஆசிரியர் ஒருவரிடம் கேட்டேன.

தம்பி பசிவந்தால் பத்தும் பறந்து போகும். இந்நிலையில் மாணவர்கள் பசியுடன் எப்படிப் படிக்க முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் சோமாலியா போல்த்தான் இங்கும் குழந்தைகள் இருப்பார்கள் என்றார் அவர்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவும் ஒன்றாகும். உணவின்றி மனிதனால் உயிர்வாழ முடியாது. இதேபோல், உணவு தேவையான அளவு கிடைக்கா விட்டால், போசாக்கின்மை, நோய்கள் எனப் பல்வேறு பிரச்சினைகள் எழும். இவை சமூகத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் இத்தகைய தாக்கங்கள் வடமராட்சி கிழக்கில் ஏற்படாமல் தடுக்க யார் முன்வருவார்கள் என இப்பகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தளபதிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

## லெப்டினன்ட் கேணல் தாக்கல் செய்தார்

கொழும்பு, செப். 16

இராணுவத் தளபதிக்கு எதிராக லெப்டினன்ட் கேணல் ஒருவர் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

லெப்டினன்ட் கேர்ணல் அனில் சுபேதா அமரசேகரா என்பவர் ''தீர்வுத் திட்டம் அமுல் செய்யப்பட்டால் நாட்டுக்கு பேரழிவு ஏற்படும்'' என்று தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களை படையினருக்கு விநியோகித்தார்.

இக் குற்றச்சாட்டையடுத்து இவர் இராணுவத் தலைமையக வளவுக்குள் பிரவேசிக்க 09 - 06 - 97 முதல் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு தடை விதித்தமை தமது அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று அவர் மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு மீது இடைக்கால உத்தரவு பிறப்பிப்பது தொடர்பாக எதிர் வரும் 23 ஆம் திகதி மூன்று நீதியரசர்கள் முன் ஆராயப்படவிருக்கிறது.

(இ-150-3)

# எமது கஷ்ட நிலை குறித்து எழுதுங்கள்

## பத்திரிகையாளரிடம் படையினர்

கொழும்பு ,செப். 16

''யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்ல காத்துக் கிடக்கும் எமது கஷ்ட நிலையைப் பற்றி எழுதுங்கள்''

இப்படிக் கூறினார்கள் வடக்கில் பணி புரியும் படையினர்.

யாழ்ப்பாணம் வந்த கொழும்புப் பத்திரிகையாளர்களிடமே அவர்கள் இப்படிக் கூறினார்கள்.

பலாலியில் விமானத்துக்கு காத்து நின்ற படையினர் கொழும்பு பத்திரிகையாளர்களுடன் தமது பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள்.

''எமது பெரும் பிரச்சினை போக்குவரத்துத் தான். எமது போக்குவரத்து பிரச்சினை பற்றி பத்திரிகைகளில் எழுதுங்கள்'' என்று அவர்கள் கூறினர்.

(இ-150-3)

# பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 16

கல்வித் திணைக்களம், யாழ். வலயம் 2 இன் முறைசாராக் கல்விப் பிரிவும், ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுறவு நிறுவனமும் இணைந்து பாடசாலையில் இருந்து வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் சார் பயிற்சி நெறிகளை வழங்க உள்ளன.

ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் புனருத்தாரண வேலைகளின் போது மேசன்வேலை, தச்சுவேலை, மின் இணைப்பு வேலை, வர்ணம் தீட்டும் வேலை ஆகிய தொழில்களில் தொழில்சார் பயிற்சி அளிக்கப்படும் என்றும்—

பயிற்சி பெற விரும்பும் இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

(இ-5)

# தெரேஸா, டயானா மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 16

அன்னை தெரேஸா, பிரிட்டிஷ் இளவரசி டயானா ஆகியோரின் மறைவுகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்களை யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த வாரம் இணையத்தின் கூட்டம் இணையத் தலைவர் எஸ். பரமநாதன் தலைமையில் நடைபெற்ற சமயம் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

''இன்னற்பட்ட மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்த அன்னை தெரேஸா வறுமையில் வாடிய மக்களின்— அல்லற்பட்ட மக்களின்— அநாதைகளான மக்களின் விடிவுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றினார். அவர் போன்ற தலைவர் எம் மத்தியில் உருவாக வேண்டும்'' என்று தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய தூதரகத்துக்கு அனுப்புவது என்று முடிவாகியது.

''இளவரசி டயானா கண்ணி வெடிகளை அகற்றுவதில் தீவிரமாக முன்னின்று செயற்பட்டமைக்காக நாம் அவருக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டும். எமது பிரதேசத்தில் தினம் தினம் கண்ணி வெடிகளால் மக்கள் பாதிக்கப்படும் நிலை இனியும் ஏற்படாமல் இருக்க டயானா காட்டிய வழியில் சகலரும் செல்ல வேண்டும்'' என்ற மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு பிரிட்டிஷ் தூதரகத்துக்கு அனுப்பமுடிவாகியது.

(இ-3)

# பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விரைவில் பழைய இடத்தில்

தற்போது வடலியடைப்பிலுள்ள இரு தனியார் வீடுகளில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விரைவில் பழைய இடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வகுப்பறை மண்டபத்தில் செயற்படவுள்ளது,

பிரஸ்தாப கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கம் சேகரித்த நிதியைக் கொண்டு இந்த வகுப்பறை மண்டபம் நிறுவப்பட்டது.

கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும் இந்த நிதிக்கு 26 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பு செய்துள்ளனர்.

கடந்த 1992ஆம் ஆண்டு தொடக்கம் இக்கல்லூரி இடம் பெயர்ந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இக்கல்லூரிக் கட்டடத்தின் மீது விமானக்குண்டு வீச்சு இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்டதால் கட்டடம் பலத்த சேதமடைந்தது.

(இ-135)

# இடம்பெயர்ந்தோர் முகாமில் பொதுக் கிணறுகள் அமைப்பு

வலிகாமம் தெற்கு, செப்.16

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள நலனோம்பு நிலையத்தில் தங்கி வாழும் 120 குடும்பங்களின் குடி தண்ணீர் தேவை கருதி அங்குள்ள கிணறு ஒன்று புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கத்தின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அந்தக் கிணற்றை புனரமைத்துள்ளது.

அத்துடன் அங்கு வாழும் குடும்பங்களின் தேவைக்கென இரண்டு குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

இங்குள்ள மக்களின் சுகாதார தேவைகருதி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மலசல கூடங்களையும் விரைவில் அமைத்துக் கொடுக்க உள்ளது.

(ஐ-152)

# வர்த்தமானி பார்வையிட அலைய வேண்டிய நிலைமை

## பிரதேச செயலகங்களில் தேக்கம்

யாழ்ப்பாணம், செப். 16

அரசாங்கத்தினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வர்த்தமானிகள் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படாமல் சில பிரதேச செயலகங்களில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வர்த்தமானிகள் முன்னர் பிரதேச செயலகங்களால் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன என்றும்—

பொது மக்கள் தமது கிராம சேவையாளர் அலுவலகத்திற்குச் சென்று இவற்றைப் பார்வையிடக்கூடியதாக இருந்தது என்றும்—தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது வர்த்தமானிகள் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் இவற்றைப் பார்வையிட பிரதேச செயலகங்கள், அஞ்சல் அலுவலகம் என அலைந்து திரிய வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(இ-5)

# தையல் மனைப்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கிராம அபிவிருத்தித் திணைக்கள மாதர் அபிவிருத்தி நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தையல் பொருள்கள் மற்றும் மனைப் பொருள் கண்காட்சி அன்ன சத்திர ஒழுங்கையில் நடைபெறுகின்றது.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கண்காட்சி இன்று மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

(இ-5)

# வடமராட்சிப் பகுதியில் நாய்களால் கடிபடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

செம்பியன்பற்று, செப். 16

வடமராட்சிப் பகுதியில் நாய்களால் கடிபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விசர்நாய்க் கடிக்கு இலக்கான 23 பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 8பேர் இம்மாதத்தில் நாய்களால் கடியுண்டவர்களாவர்.

கட்டாக்காலி நாய்கள் பெருகி வருவதாலேயே நாய்களால் கடிபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-36)

# வலயம்-2 பாடசாலைகளுக்கு 39 தமிழ்மொழி மூல ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளுக்கு 39 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

நியமனம் பெறும் ஆசிரியர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேசிய அடையாள அட்டை, கல்விச்சான்றிதழ்கள் ஆகியற்றுடன் வலயம் 2 அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

★ என். சுபாசினி — கொழும்பு - 6.
★ கே. ஆதித்தன் — உடுவில் கிழக்கு.
★ எஸ். சிவதர்சினி — சுன்னாகம்.
★ கே. வசந்தி — குப்பிளான்.
★ கே. ரகுநாதன் — ஏழாலை மேற்கு.
★ பி. கல்யாணி — ஏழாலை மேற்கு.
★ பி. கலையரசன் — இணுவில் தெற்கு.
★ எம். ரஞ்சிதமலர் — சுன்னாகம் கிழக்கு.
★ எஸ். விஜயகுமார் — தாளையடி.
★ கே. பிரபாகரன் — குடத்தனை.
★ கே. பாஸ்கரன்—மருதங்கேணி வடக்கு.
★ எஸ். லோகநாதன் — குடத்தனை.
★ கே. கே அம்பிக்குமார் — செம்பியன்பற்று.
★ என். பாணீதன் — கொழும்பு-6.
★ டி. எமல்டா கிரேஸ் — தெகிவளை.
★ எஸ். சிவா — புத்தூர்.
★ ஜி. கிறிசாந்தி — உரும்பிராய் வடக்கு.
★ கே. கலைக்குமார்— ஆவரங்கால் மேற்கு.
★ எஸ். வாமதேவன்— ஊரெழு கிழக்கு.
★ ஜி. விக்கினேஸ்வரன் — அச்சுவேலி தெற்கு.
★ ஐ. குலசேகரம் — புலோலி வடக்கு.
★ எஸ். ஜெயந்தி — அல்வாய் மேற்கு.
★ எஸ். நகுலன்—[illegible] தெற்கு.
★ எ. சடாட்சரலிங்கம்— அல்வாய் வடக்கு.
★ வை. ரமேஸ்—புலோலி மேற்கு.
★ எஸ். குவேந்தன்—அல்வாய் மேற்கு.
★ எஸ். சிற்பரன்—நெல்லியடி.
★ வி. சுனீத்திரா—நெல்லியடி.
★ சி. சுபேந்திரன் — அல்வாய் கிழக்கு.
★ ஆர். விஜிதன் — கரவெட்டி கிழக்கு.
★ எ. புனிதவாணி — இளவாலை.
★ எஸ். கலைவாணி — பண்டத்தரிப்பு.
★ ஜே. கோகலை—நவாலி தெற்கு.
★ எஸ். ஆர். செல்வமகள் —நவாலி தெற்கு.
★ வி. ரதி — மானிப்பாய் வடக்கு.
★ எஸ். சவுதாமினி — மானிப்பாய் வடகிழக்கு.
★ எஸ். தாரிணி— சண்டிலிப்பாய் மத்தி.
★ ஆர். நவகேதீஸ்வரன்— [illegible]
★ பி. [illegible]—உடுவில் வடக்கு.

(இ-3)

# படையினர் சம்பந்தப்பட்ட ஊழல் குறித்து விசாரிக்க விசேட பிரிவு

## தளுவத்தவின் அலுவலகத்தில் இயங்கும்

படையினர்மத்தியில் இடம் பெறும் ஊழல்கள், தவறுகள் தொடர்பாக விசாரிக்க விசேட பிரிவு ஒன்றை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தளுவத்த தமது அலுவலகத்தில் அமைத்துள்ளார்.

படையினர் சம்பந்தமாக வரும் முறைப்பாடுகள் இந்தப் பிரிவால் விசாரிக்கப்பட்டு இராணுவத் தளபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

(இ-150 - 3)

# பொது மக்கள் ஐக்கிய முன்னணி நிறைவேற்றுக் குழு கூடுகிறது

கொழும்பு, செப். 16

நீண்டகால இடைவெளியின் பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழு எதிர் வரும் 18 ஆம் திகதி கூடவிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சில தம்முடன் கலந்தாலோசிக்காமல் அரசாங்கம் செயற்படுவதாக குற்றஞ்சாட்டிய பின்னர் தற்சமயம் நிறைவேற்றுக் குழு கூட்டப்படுவதாக கூறப்படுகிறது.

(இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மண்எண்ணெய்!

யாழ்ப்பாணக் குடாநாடு வாழ் மக்களுக்கு பிரச்சினைகள், கஷ்டங்கள், பற்றாக் குறைகள் இல்லாத நாளே இல்லை. இவற்றில் ஒவ்வொரு காலத்துக்கு ஒன்று பூதாகாரமாக வந்து அச்சுறுத்தும், வாட்டும். அந்த வகையில் இப்போது எங்கும் பெரிதாகப் பேசப்படுவது, தட்டுப்பாடாக இருப்பது மண்எண்ணெய்!

குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை மூடப்பட்ட காலத்திலிருந்தே, தமிழ்ப் பகுதிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட காலத்தில் இருந்தே எரிபொருள்— மண்எண்ணெய் —தட்டுப்பாடு இங்கு அடிக்கடி தலைகாட்டுவது வழக்கமாகிவிட்டது.

மண்எண்ணெய் உணவுப் பொருள் அல்ல. உணவுப் பொருள் கிடைத்தாலும் மண்எண்ணெய் கிடையாமல் மக்கள் அதற்காகஅலைந்து திரியும்அவலம் அடிக்கடி இங்கு வருகிறது.

கப்பலில் அதுவந்துசேர்வதில் தடங்கல்கள், தடைகள் உண்டாகும் போதெல்லாம் மக்கள் அடிபிடிப்படுவதைக் காண முடியும். அப்படி ஒரு நிலை இப்போது மீண்டும் வந்திருக்கிறது!

மண்எண்ணெய்க்குப் பற்றாக்குறை, தட்டுப்பாடு என்று வரும்போது அதனை வைத்துப் புதிய பணக்காரர்கள் ஆகியோரும் உள்ளனர். மண்எண்ணெய் விநியோகத்தில் மோசடிகள், ஊழல்கள் நடைபெறுவதால் அது பொதுமக்களின் கைக்கு வந்து சேர்வது அரிதாகியும் போய்விடுகிறது. மொத்தத்தில் குடாநாட்டில் அது அக்கறைக்குரிய வர்த்தகப் பொருளாகியும் மாறிவிட்டது.

கப்பல்கள் வந்து போவதில் தடங்கல்கள், தாமதங்கள் இருந்தபோதிலும் மண்எண்ணெய்க்கு பெரிய அளவில் தட்டுப்பாடு வராமல் விநியோகிக்கக் கூடிய அளவுக்கு அது கையிருப்பில் இருப்பதாக கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. தேவையைப் பொறுத்து மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தைச் செய்வதன் மூலம் நிலைமை மோசமடையாமல் தடுக்கலாம் என்றும் ஆறுதல் கூறப்பட்டது.

ஆனால் விவசாயிகளும், வீட்டு விளக்கெரிப்பவர்களும் தேவைக்கேற்ற மண்எண்ணெய் கிடைப்பதில்லை என்று குறைப்படுகிறார்கள். குறிப்பாக விவசாயிகள் முறைப்படுகிறார்கள். தோட்டம் செய்வதற்கு ஒரு பரப்புக் காணிக்கு ஒரு வாரத்துக்கு அரை லீற்றர் மண்எண்ணெய் போதாது என்பது அவர்களின் முறைப்பாடு.

வாகனங்களுக்கு இப்போது மண்எண்ணெய்க் கோட்டா இல்லை. அவை பெற்றோலிலேயே ஓட வேண்டும் என்பது அரசின் விதி. எனினும் 80 சத வீதத்துக்கும் மேலான வாகனங்கள் மண்எண்ணெய்யிலேயே இயங்குகின்றன. அதனால் கள்ளச்சந்தை உண்டு!

கையிருப்பில் உள்ள மண்எண்ணெய் விநியோகிக்கப்படும் முறையில் குறை இருப்பதாக பாவனையாளர்கள் உணர்கிறார்கள். ஆனால் கையிருப்பில் உள்ளதை அவரவர் தேவைக்கு, சிக்கனமாகப் பயன்படுத்தும் விதத்தில் பங்கீட்டு முறை வகுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனவே, எங்கோ ஓரிடத்தில் ஏதோ ஒரு பிழை உண்டு. அதனைக் கண்டறிந்து நிவிர்த்தி செய்வதில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அரச அதிபர் செயலகம் ஆகியன ஒருங்கிணைந்து ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். மக்களும் மண்எண்ணெய்யை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும்.

இல்லை, மண்எண்ணெய் விவகாரம் தொடர் கதையாக நீளும். கவனம்......!

# வலயம்-1 பாடசாலைகளில் 49 ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 16

குறிக்கப்பட்ட சில பிரதேசங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ் மொழிமூல தகுதிகாண் ஆசிரியர் பதவிக்கு நியமிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரில் யாழ். வலயம் - 1 பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ள 49 பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலயம் - 1 பணிமனைக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா கேட்டுள்ளார்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ ஆர். சிறீராஜயோகன் — 45, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு.

★ ஏ. அருட்செல்வி — 605/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★ சீ. அலெக்ன்சான்றா, — 4 ஆம் வட்டாரம், மண்டைதீவு.

★ ரி. தமிழரசி — மே/பா டாக்டர் குமரையா, மாவட்ட வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு.

★ ஆர். வசீகரன் — இராசையா வீதி, வேலணை வடக்கு.

★ வி. தமிழினி — 46, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★. வி. விஜிதா — இல: 4, பிள்ளையார் லேன், திருநெல்வேலி.

★ கே. சியாமினி— மே/பா டாக்டர் பி. குமரையா, புதுக்குடியிருப்பு.

★ பி. சாந்தி, — 286, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ ஏ. முகுந்தன் — வட்டாரம் – 6, மண்டைதீவு.

★ வி. ஈ. கன்ரொன்றோய் — முகமாலை, எழுதுமட்டுவாள்.

★ கே. இளமதி — கலைமணி ஒழுங்கை, கட்டைப்பிராய்.

★ ரி. சிவசோதி — 22, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி.

★ எம். நந்தினி — அம்மன் கோயிலடி, மணற்காடு, காரைநகர்.

★ வி. பி. பாஸ்கரன்— புலோலி தெற்கு.

★ ஜே. சோபனா — 136, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ ஆர். சுகந்தி — பணிக்கர் வளவு, திருநெல்வேலி மேற்கு.

★ பி. பாலகிருஷ்ணன் — 196, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்.

★ எம். கேதாரநாதன் — மே/பா என். கனநாதன், டி. டி. ஐ. எஸ். அலுவலகம், கிளிநொச்சி.

★ கே. சத்தியதாசன் — அல்லன் வீதி, காரைநகர்.

★ என். பத்மநாதன் — மைல் வீதி, காரைநகர்.

★ கே. சசிகலா — ராஜா வீதி, திருநெல்வேலி கிழக்கு.

★ கே. பிரியதர்சினி — ராஜா வீதி, திருநெல்வேலி கிழக்கு.

★ ஆர். ராதா — 03, அம்மன் வீதி, கந்தர்மடம்.

★ கே. முரளிதரன் — மீசாலை மேற்கு.

★ என். கமலநந்தினி — மட்டுவில் கிழக்கு.

★ என். ஜனககுமார் — கண்டி வீதி, சாவகச்சேரி வடக்கு.

★ கே. தேவதர்ஷினி — மீசாலை மேற்கு.

★ கே. குமரபரன்—உசன்.

★ என். குகேந்திரன் —கச்சாய் வீதி, கொடிகாமம்.

★ ரி. தயாழினி — 9 ஏ, விதானை ஒழுங்கை, சுண்டுக்குளி.

★ ஜி. கெனத் மரியன் — 22 ஏ, நீர்த்தாங்கி வீதி, குருநகர்.

★ என். பத்மினி — 94, கோபால் ஒழுங்கை, வண்ணார் பண்ணை.

★ என். லிங்கேஸ்வரன் — 145/3, பிரப்பன்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை.

★ ஆர். சுகந்தினி — 103, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. யசோதரா — 6/5, பெருமாள் கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

★ எம். பிரசாந்தன் — 316, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ எம். ரஞ்சனி—687/12, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்.

★ கே. கருணரஞ்சினி — 475, பிரதான வீதி, கொழும்புத்துறை.

★ எம். சிவச்செல்வி — 25, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. லிந்தலக்ஷ்மி — 26/1, புகையிரத குறுக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

★ கே. அற்புதராஜா — கொக்குவில் மேற்கு.

★ பி. பரந்தாமன் — 18/4, பி.ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை.

★ ஆர். சிறிராகவன் — பணிக்கர் வளவு ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு.

★ கே. கௌசியா — 18, 3 ஆவது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. நாமகள் — 154/8 - சீ, ஆத்திசூடி வீதி, கந்தர் மடம்.

★ ரி. எஸ். சிவகரன் — காரைக்கால் வீதி, இணுவில்.

★ எம். சுரேகா — 35, பிறீஸ் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

★ எம். சுபாஜினி — 60, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (ஐ)

## சாவகச்சேரிப் பகுதியில்

# 24 சனசமூக நிலையங்கள் இயங்க முடியாத நிலையில்

தென்மராட்சி, செப். 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 24 சனசமூக நிலையங்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

இவற்றில் பெரும்பாலானவை படையினரின் மினி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் சில சனசமூக நிலையங்கள் சேதமடைந்துள்ளதாலும் இயங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 17 சனசமூக நிலையங்களும் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 7 சனசமூக நிலையங்களும் இயங்க முடியாமல் உள்ளன.

இப்பகுதிகளில் உள்ள 108 சனசமூக நிலையங்களில் தற்போது சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி, கைதடி, சரசாலை, கச்சாய், வரணி, மிருசுவில் ஆகிய உப அலுவலக பிரிவுகளில் 77 சனசமூக நிலையங்களும் —

நகரசபை எல்லைக்குள் 7 சனசமூக நிலையங்களும்— இயங்குவதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. சி. பகீரதன் தெரிவித்தார்.

(இ-117)

**நாளை**

**புரட்டாதி 1**

புதன்கிழமை

திதி: பிரதமை

முன் இரவு 10.52 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

காலை 7.16 வரை.

உத்தரட்டாதி

வைகறை 5.38 வரை.

மஹாளயபக்ஷாரம்பம்

சுபநேரம்: 4.33-6.03

ராகுகாலம்: 12.03-1.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# 2 தபாலகங்களில் ஞாயிறு தொலைபேசிச் சேவை

யாழ்ப்பாணம், செப். 16

கடந்த சில வாரங்களாக ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாள்களில் யாழ்ப்பாணம், சுண்டுக்குளி தபாலகங்களில்இடைநிறுத்தப்பட்டிருந்த தொலைபேசிச் சேவைகள் மீண்டும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக வடமாகாண பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இம்மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற வடபகுதி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் போதிய தொலைபேசி வசதிகள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் நலன் கருதி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் தபாலகங்களில் தொலைபேசி அழைப்புகள் வழங்குவதற்கு பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தினால் சிபார்சு செய்யப்பட்டிருந்ததாகவும் —

இந்த சிபார்சு மேற்படி கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு இதற்கான அனுமதி தபால்மா அதிபதி திருமதி சோமா கொட்டகதெனியவினால் வழங்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணம், சுண்டுக்குளி தபாலகங்களில் காலை 8-00 மணி முதல் 12-00 மணி வரை திறந்து வைப்பதற்கே அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் —

இவ்விரு தபாலகங்களிலும் விரைவில் காசு வசூலிக்கும் தொலைபேசி அழைப்புப் பெட்டிகள் (Coins Collecting box) பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் —

அதன் பின்னர் வழமை போல் இலங்கையில் மற்றைய அனைத்துத் தபாலகங்களிலும் நடைமுறையிலிருப்பதைப் போல ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாள்களிலும் இரு தபாலகங்களும் மூடப்படும் என்றும் —

பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ். 'ரெலிக்கொம்' சராசரியாக வார நாள் ஒன்றில் வழங்கும் தொலைபேசி அழைப்புக்களில் 80 சத வீதத்தை ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் தபாலகங்களுக்கு வழங்குவதற்கு உடன்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ரெலிகொம் வழமையாக அறவிடுகின்றதொகையையே தபாலகங்கள் தொலைபேசிச் சேவைக்காக அறவிடும் என்றும்—

மாணிக்கவாசகர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## மன்னாருக்கு இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், செப். 16

காங்கேசன்துறையிலிருந்து தலைமன்னாருக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று கப்பலில் பயணம் செய்யப் பெயர் பதிவு செய்தவர்களை இன்று காலை 8 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## இன்று பூரண சந்திர கிரகணம்

கொழும்பு, செப். 16

பௌர்ணமி தினமான இன்று பூரண சந்திர கிரகணம் இடம்பெறவுள்ளது.

இன்று இரவு 10.00 மணி 11 நிமிடம் முதல் சந்திரன் பூமியின் நிழலின் ஊடாகச் செல்ல ஆரம்பிக்கும்.

இரவு 11.00 மணி 8 நிமிடத்துக்கு சந்திர கிரகணம் ஆரம்பமாகும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து நாளை அதிகாலை 2.00 மணி 25 நிமிடம் வரை கிரகணம் நீடிக்கும்.

பூரண சந்திர கிரகணம் நள்ளிரவு 12.00 மணி 15நிமிடம் முதல் ஒரு மணி 18 நிமிடம் வரை நிகழும்.

இன்றைய சந்திர கிரகணத்தை வெற்றுக்கண்களால் பார்ப்பதால் தீங்கு ஏதும் ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## கலைப்பீட மாணவர் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 4 ஆம் வருட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று நாளை புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பரீட்சைகளைப் பின்போடுதல் தொடர்பான விடயங்கள் தீர்மானிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## கல்வி டிப்ளோமா சான்றிதழ் விநியோகம்

1993—94 கல்வியாண்டின் தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா இறுதித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்கள் தமக்குரிய சான்றிதழ்களை சிரேஷ்ட விரிவுரையாளரிடம் எதிர் வரும் சனிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம் என வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் எஸ். ரட்ணராஜா தெரிவித்துள்ளார். (ஐ-9)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம் செப். 16

ஆத்மஜோதி நா. முத்தையாவின் இரண்டாம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு ஏழாலை இலந்தைக்கட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலயத்தில் இன்று காலை 7-00 மணிக்கு திருவாசக முற்றோதலும் மகேஸ்வர பூசையும் இடம் பெறும். 'திருவாசகம் முற்றுணர்தல்' என்ற தலைப்பில் பண்டிதர் மு. கந்தையா சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். விழாவில் வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்வார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி தேர்த் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள்

யாழ்ப்பாணம், செப். 16
சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று மிகவும் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்து திரண்ட பல்லாயிரக்கணக்கான அடியார்கள் முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வந்த திருக்காட்சியைக் கண்டு களித்தனர்.

நேற்று அதிகாலை முதற்கொண்டே பக்தர்கள் ஆலயத்தில் திரளத் தொடங்கினர்.

வடமராட்சிப் பகுதி மக்கள் மட்டுமன்றி தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகப் பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இம்முறை தேர்த் திருவிழாக் காண வந்திருந்தனர்.

முற்பகல் 11 மணிக்குப் பின்னர் முருகப் பெருமான் தேரில் வலம் வந்தார்.

வலிகாமம் பகுதியில்இருந்து வாகனங்களில் சென்ற பக்தர்கள் வல்லைவெளி சோதனைத் தடை முகாமில் நீண்ட நேரம் காத்து நிற்க நேர்ந்தது.

அடையாள அட்டைகளை அங்கு ஒப்படைத்து அதற்குரிய அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் வழமையான நடைமுறை நேற்றுக்காலையில் அங்கு பின்பற்றப்பட்டது.

வாகனங்களிற் சென்ற பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இதனால் சிரமங்களை எதிர்நோக்கினர். எனினும் பயணிகள் நெருக்கடி அதிகரித்ததை அடுத்துப் பின்னர் அந்த நடைமுறை கைவிடப்பட்டது. அடையாள அட்டையை ஒப்படைக்காமலே ஆலயப் பகுதிக்குச் செல்ல பக்தர்களைப் படையினர் அனுமதித்தனர்.

முன்னதாக சோதனை நிலையத்தில் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து விட்டு ஆலயத்துக்குச் சென்ற பக்தர்கள் அங்கிருந்து திரும்பிய போது தமது அடையாள அட்டைகளைத் திரும்பப் பெறுவதிலும் இடைஞ்சல்கள் ஏற்பட்டன. இதனால் பக்தர்கள் பலர் தங்கள் அடையாள அட்டைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளாமலேயே வீடு திரும்ப நேரிட்டது (ஐ)

## கச்சாய் வீதி பலத்த சேதம்

கொடிகாமத்திலிருந்து கச்சாய் வரையிலான வீதி மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாகச் செல்லும் பாதசாரிகள், வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

இவ்வீதியின் பல இடங்களில் பாரிய பள்ளங்கள் காணப்படுவதால் மழை காலத்தில் மேலும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-117)

## வன்னியில் சனத்தொகை கணக்கெடுப்பு

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள மக்களிடையே கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அந்தப் பகுதி அரச அதிபர்களால் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

பிரத்தியேக அட்டைகள் விநியோகிக்கப்பட்டு இக் கணக்கெடுப்பு நடத்தப்படும். (இ-3-150)

## மீனவர்களுக்கு வலைகள் விநியோகம்

வட்டுக்கோட்டை, செப். 16
அராலிப் பகுதி மீனவர்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரக திட்டத்தின் கீழ் வலைகள் வழங்கும் வைபவம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 - 00 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மண்டபத்தில் பிரதேச செயலாளர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும்.

ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகள் நேரடியாக சமுகமளித்து அராலிக்கிராமத்திலுள்ள சுமார்270 குடும்பங்களுக்கு வலைகளை விநியோகம் செய்வார்கள்.

ஒவ்வொரு குடும்பமும் வலையின் பெறுமதியில் ஐம்பது சதவீத பணத்தை மீள செலுத்துவதற்காக மாதாந்தம் நூறுரூபா வீதம் செலுத்தி வரவேண்டும்.

மிகுதி ஐம்பது வீதமும் மானிய அடிப்படையில் வழங்கப்படும். (இ-12)

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் டொனால்ட் கணஷ குமார் ஞாபகார்த்தமாக நடத்தும் தோற்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று எஸ். வி. முருகேசு நிறுவன ஆதரவுடன் சென் பற்றிக்ஷ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வி. க. அணியை எதிர்த்து பற்றீசியன் வி. க. அணி மோதும்.

## ஜே. வி. பி. எதிர்ப்புக்கூட்டம்

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஜே. வி. பி. பிரசாரக் கூட்டங்களை நடத்தவிருக்கிறது.

''இலங்கை எங்கே போகிறது'' என்ற தலைப்பில் நடத்தப்படும் இக் கூட்டங்கள் கொழும்பு, காலி, அனுராதபுரம், பதுளை ஆகிய இடங்கள் உட்பட பலஇடங்களில் நடத்தப்படவிருக்கின்றன. (இ-150-3)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 97, 98
★ பௌதிகம் ★
PAPER CLASS
பிரிவு 1 திங்கள், புதன் 4.00
பிரிவு 2 சனி, ஞாயிறு 7.30
ஆசிரியர்
திரு. ஜெயசீலன் B.Sc. (Hons)
ஆரம்பம்: 17-09-1997 4.00 P.M.
[47430]

# முக்கிய விடயங்களில் இணைந்து செயற்பட சிறிமானி-தினேஷ் முயற்சி

கொழும்பு, செப். 16
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், தீர்வுப் பொதியை எதிர்த்தல் ஆகிய விடயங்களில் பொது உத்தி ஒன்றை உருவாக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் சிறிமானி அத்துலத் முதலியும், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளுக்கு எதிராக நடத்த திட்டமிடப்பட்டுள்ள சமாதான இயக்கம் குறித்தும் இருவரும் விவாதித்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — தமக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் தமக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யுமாறு பொலீஸ்மா அதிபரிடம் சிறிமானி கேட்டுள்ளார்.

அவருக்கு ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும், இரு சிவில் பொலீஸாரும் தற்சமயம் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ளனர். (இ-150-3)

## தியாகி திலீபனின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணம், செப்.16
இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த காலத்தில் 1987ஆம் ஆண்டு நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 10 ஆவது ஆண்டு நினைவு நாள்கள் இன்று முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

நினைவு நாள்களை ஒட்டி இன்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை வன்னிப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள், அடையாள உண்ணாவிரதங்கள் என்பன நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்
ரம் பேர் இந்த ஊர்வலங்களில் பங்குபற்றினர்.

ஊர்வலத்தின் இறுதியில் கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் பகுதியில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சமூக அமைப்புகளைச் சேர்ந்த பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

உரைகளின் முதலில் அரசுக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்று செஞ்சிலுவைச் சர்வதேச குழுப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த மகஜரில் விடுக்கப்பட்டுள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ புலிகளுடனான யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, நிபந்தனையற்ற பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும்.

★ வன்னிப் பெருநிலப் பரப்பில் அல்லற்படும் மக்களுக்குத் தேவையான— அத்தியாவசிய— உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் போன்றவற்றைத் தடை செய்யாமல் உடன் அங்கு அனுப்பி வைக்க வேண்டும்.

★ இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் மீது மேற்கொள்ளப்படும் ஷெல், விமானத் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

★ தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதை உடன் நிறுத்த வேண்டும்.

★ தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருந்து இராணுவ முகாம்களை உடன் வாபஸ் பெறவேண்டும்.

— இவையே அந்த மகஜரில் இடம்பெற்ற முக்கிய கோரிக்கைகளாகும்.

இந்த விவகாரத்தில் ஐ. நா. தலையிட்டு அரசும் புலிகளும் நிபந்தனையின்றிப் பேசும்படி வற்புறுத்தவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (உ-21)

## "அன்னை உள்ளே" என்ற அறிவிப்புப் பலகை நிரந்தரமாகப் பொருத்தப்பட்டது

கல்கத்தா, செப் 16
கல்கத்தாவில் உள்ள ''மிஷனரி ஒவ் சாரிற்றி'' அமைப்பின் தலைமையகமான அன்னை இல்லத்தில் அன்னை தெரேஸா இப்போது இல்லை. ஆனால் அந்த இல்லத்தின் வாயிலில் ''அன்னை உள்ளே'' என்ற அறிவிப்புப் பலகை இன்னமும் தொங்கவிடப் பட்டுள்ளது.

அன்னை உயிருடன் இருந்த காலத்தில் அவர் வெளியே சென்றிருக்கும் நேரங்களிலும், அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற நாள்களிலும் ''அன்னை வெளியே'' என்ற அறிவித்தல் பலகை அங்கு காணப் படுவது வழக்கம்.

தற்போது அன்னை மறைந்துவிட்டார். ஆனாலும் ''அன்னை உள்ளே'' என்ற அறிவித்தல் பலகை அகற்றப்படாமல் அப்படியே அங்கு நிரந்தரமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

உடலாலும் உள்ளத்தாலும் அன்னை இன்னமும் அங்கேயே தங்களுடன் வாழ்வதாகத் தாம் உணர்வதாக அருட் சகோதரி நிர்மலா தெரிவித்தார். (ஐ-9)

## கல்விக் கல்லூரிக்குத் தெரிவான மாணவரின் பெயர் விவரம்

யாழ்ப்பாணம், செப். 16
வவுனியா — மட்டக்களப்பு கல்விக் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரில் அனுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பாடநெறி நாளை மறுதினம் வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இவர்களை குறித்த கல்விக் கல்லூரிகளுக்குச் சென்று உடன் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் தனித்தனியான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக வவுனியா கல்விக் கல்லூரிப் பீடாதிபதி செ. அழகரத்தினம் அறிவித்துள்ளார்.

அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை இலக்கம் 361, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'உதயன்' பணிமனையிலும், யாழ். கல்வி வலயம் - 1 அலுவலகத்திலும் பார்வையிடலாம். (ஐ)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 16
வவுனியா - மட்டக்களப்பு கல்விக் கல்லூரிகளில்97 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி பாடநெறிகளுக்கு எஞ்சியுள்ள சில வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று யாழ். கல்வி வலயம்-1 அலுவலகத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக வவுனியா கல்விக் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஐ)

## 'ரெலிகொம்' நிலையத்தை தாக்க முயற்சி

கொழும்பு, செப். 16
கல்முனை ''ரெலிகொம்'' நிலையத்தை நேற்றுமுன்தினமிரவு தாக்குவதற்கு புலிகள் எடுத்த முயற்சியை பொலீஸார் முறியடித்தனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது. (உ-9)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 16
இணுவில் தெஸ்பியன்கலை வட்டத்தினர் நடத்தும் மாதாந்த அறிவியல் கருத்தரங்குத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெஸ்பியன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் ''கட்டிளமைப் பருவத்தினரின் பிரச்சினைகளும், தீர்வுகளும்'' என்னும் தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரன் உரையாற்றுவார். (ஐ)

## எண்ணெய்க் குதங்கள் எரிகின்றன

ஹைதராபாத், செப். 16
ஆந்திரா மாநிலத்தில் விசாகப்பட்டினத்தில் உள்ள எரிபொருள் குதங்களில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட பெரும் தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது.

தீயை முற்றாக அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் நேற்று முழுவதும் ஈடுபட்டனர்.

இந்தத் தீ விபத்தில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது. சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான எரிபொருள் தீயினால் நாசமாகி விட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ஐ-3)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்)
வம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதேவேளை—
குணரத்தினவின் கொலை தொடர்பாகப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த சந்தேக நபர்கள் ஐவர் நேற்று சட்டத்தரணி முன்னிலையில் தங்காலை மஜிஸ்திரேட் நீதிமன்றில் சரணடைந்தனர். [ஐ-9]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சக மனையில் 16-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org